# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:50** **தேதி:-17.07.2015**

**FORUM கூட்ட முடிவுகளும், DOT செயலருடன் நடைபெற்ற சந்திப்பும்**

அன்பார்ந்த தோழர்களே,

BSNL அனைத்து ஊழியர்-அதிகாரிகள் சங்கங்களின் (FORUM) கூட்டமைப்பின் கூட்டம் 15.7.2015 அன்று நடைபெற்றது. அதில், BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, AIGETOA, SNATTA, BTU மற்றும் BSNLOA ஆகிய சங்கங்களின் பொதுச் செயலாளர்கள் / பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கூட்டமைப்பின் தலைவர் தோழர். சந்தேஷ்வர் சிங் தலைமை தாங்கினார். கூட்டமைப்பின் கன்வீனர் தோழர். அபிமன்யூ, அனைவரையும் வரவேற்றதுடன், கூட்டத்தின் விவாதப் பொருளை விளக்கிப் பேசினார். கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துத் தலைவர்களும் பிரச்னைகளை விரிவாக விவாதித்து, இறுதியாக பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளனர்.

1) இரண்டு நாள் வேலைநிறுத்தத்தில் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகள் குறித்து DoT செயலாளரை கூட்டமைப்பின் மையக் குழு உடனடியாக சந்தித்து விவாதிப்பது.
2) BSNL- இல் நேரடி நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு 30% பணி ஓய்வு பலன்கள் வழங்கும் பிரச்னை குறித்து BSNL நிர்வாகத்தோடு தீவிரமாக விவாதிப்பது.
3) BSNL நிறுவனத்தின் மனித வளத் திட்டம் குறித்து, கூட்டமைப்போடு விவாதிப்பதற்கு CMD BSNL ஏற்கனவே உறுதியளித்துள்ளார். அதனுடன், டெலாய்ட்டி கமிட்டி சிபாரிசுகளையும் உடனடியாக CMD- யுடன் விவாதிப்பது.
4) BSNL நிறுவனத்தின் புத்தாக்கம் குறித்த கோரிக்கைகளை விவாதிப்பதற்கு மாண்புமிகு தொலை தொடர்புத் துறை அமைச்சர் இதுவரை கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்திக்கவில்லை. உடனடியாக இந்த சந்திப்புக்கு தீவிரமான ஏற்பாடுகளைச் செய்வது.
5) BSNL- இன் சொத்துக்களை மாற்றுவதற்குத் தேவையான அடிப்படையான வேலைகளை பெரும்பான்மையான மாநில நிர்வாகங்கள் இன்னும் முடிக்கவில்லை என்று தெரிகிறது. உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி, CMD BSNL- க்கு கூட்டமைப்பின் சார்பில் கடிதம் எழுதுவது.
6) புதிய தரைவழி இணைப்புகள் கொடுக்க இயலவில்லை என்ற காரணத்தால், இரவு நேர இலவச அழைப்புத் திட்டத்தின் பலன் பல இடங்களில் கிடைக்கவில்லை என்பதைக் காண முடிகிறது. இந்தத் தடையைத் தாண்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு CMD BSNL- க்கு கடிதம் எழுதுவது.
7) BSNL ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்தை உயர்த்துவதைப் பொறுத்த வரை, 3-வது ஓய்வூதிய மாற்றக் குழுவுக்கு இக்கோரிக்கை கொடுக்கப் படும் என்று DoT செயலாளருடன் 1.5.2015 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது உறுதியளிக்கப் பட்டது. அரசு ஓய்வூதியத்தை உயர்த்துவது குறித்து பரிசீலித்து வரும் 7- வது சம்பளக் குழுவுக்கு இப்பிரச்னை கொடுக்கப் பட வேண்டும் என்பதை DoT- யிடம் வலியுறுத்துவது.

**DoT செயலாளருடன் சந்திப்பு.**

BSNL அனைத்து ஊழியர்-அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு(FORUM) மையக் குழு தலைவர்கள் DoT செயலாளர் திரு. ராகேஷ் கார்க் அவர்களை 16.7.2015 சந்தித்தனர். BSNL நிறுவனத்தின் புத்தாக்கம் சம்பந்தமாக கூட்டமைப்பின் முக்கிய கோரிக்கைகள் குறித்து DoT எடுத்துள்ள நடவடிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

**USO நிதியிலிருந்து BSNL நிறுவனத்திற்கு 1250 கோடி ரூபாய் வழங்க வேண்டும் :**

டெலிகாம் கமிஷன் இதற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளதாகவும், அமைச்சரவையின் ஒப்புதலுக்கு இது கொண்டு செல்லப் படுவதாகவும் DoT செயலாளர் தெரிவித்தார்.

**ஓய்வூதியதாரர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு :**

அமைச்சரவையின் குறிப்பு குறித்த கருத்துக்களை செலவினத்துறை (Department of Expenditure) இதுவரை தெரிவிக்கவில்லை என்பது DoT செயலாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப் பட்டது. இது குறித்து உடனடியாக செலவினத் துறை செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பும்படி நிதித் துறை உறுப்பினருக்கு (MEMBER-FINANCE) DoT செயலாளர் உத்தரவிட்டார். அமைச்சரவைக்கு இது குறித்த குறிப்பு உடனடியாக அனுப்பி வைக்கப் படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

**BWA அலைக்கற்றை கட்டணத்தைத் திருப்பி வழங்குவது :**

BWA அலைக்கற்றை கட்டணத்தைத் திருப்பி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து மிகுந்த கவலையை மையக் குழு உறுப்பினர்கள் DoT செயலாளரிடம் தெரிவித்தனர். மாண்புமிகு தொலைதொடர்பு அமைச்சர் இது குறித்து நிதியமைச்சகத்துடன் விவாதித்துள்ளதாக DoT செயலாளர் தெரிவித்தார்.

**2013-14- ஆம் ஆண்டில் BSNL நிறுவனம் செலுத்திய 830 கோடி ரூபாய் திரும்ப வழங்கப் படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.**

-

**ஓய்வூதிய பங்கு தொகை கணக்கிடுதல் :**

ஓய்வூதிய பங்கு தொகைக்கு அடிப்படை சம்பளத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஊதிய விகிதத்தின் அதிக பட்ச தொகைதான் தற்போதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டு வருவதையும், இந்தப் பிரச்னை இன்னும் தீர்க்கப் படவில்லை என்பதையும் DoT செயலாளரிடம் சுட்டிக் காட்டப் பட்டது. உரிய நடவடிக்கை எடுப்பதாக DoT செயலாளர் தெரிவித்துள்ளார்.

**5) BSNL நிறுவனத்தின் சொத்துக்கள் BSNL பெயரில் மாற்றம் செய்யப் படுதல் :**

1.5.2015 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைக்குப் பிறகு, இப்பிரச்னையில் பெரிய அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது DoT செயலாளரிடம் சுட்டிக் காட்டப் பட்டது. **BSNL** நிறுவனத்தின் கட்டிடங்களையும், நிலங்களையும் பல இடங்களில் DoT கையகப் படுத்தி உள்ளது என்று மையக் குழு தலைவர்கள் புகார் தெரிவித்தனர். **BSNL** நிறுவனத்தின் அனைத்து சொத்துக்களையும், உடனடியாக **BSNL** நிறுவனத்தின் பெயருக்கு மாற்றுவதற்கு

தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். உரிய நடவடிக்கை எடுப்பதாக DoT செயலாளர் உறுதியளித்துள்ளார்.

**TERM CELL ஊழியர்களுக்கு BSNL நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஊதியப் பணத்தை DOT திரும்ப வழங்குவது :**
தேவையான நடவடிக்கை எடுக்கப் படும் என DoT செயலாளர் உறுதியளித்துள்ளார்.

**BSNL - MTNL நிறுவனங்களை இணைக்கும் பிரச்னை :**
இந்தப் பிரச்னையில் இறுதி முடிவு எடுப்பது மத்திய அரசாங்கத்திடம் உள்ளதாக DoT செயலாளர் தெரிவித்துள்ளார்.

தோழர்களே,
கடந்த எட்டு மாத காலமாக நாம் இடையறாது நடத்தி வந்த இயக்கங்களும், குறிப்பாக ஏப்ரல் 21-22 வெற்றிகரமான வேலை நிறுத்தமும்தான் இந்த முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. போராட்டங்களில் கலந்து கொண்ட தோழர்களுக்கும் தலைவர்களுக்கும் மீண்டும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். **தொடர்ந்து விழிப்புடன் செயல்பட்டு, நம் வாழ்வாதாரத்தை - மக்கள் சொத்தான BSNL- ஐப் பாதுகாப்போம்!**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**